

மதுரை வடக்கு மாவட்டம் மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பில் கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு அலங்காநல்லூர் அருகில் உள்ள கீழக்கரை கிராமத்தில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில் தென் மாவட்டங்களில் இதுவரை இல்லாத வகையில் தொடர் ஜல்லிக்கட்டு போட்டியை இரண்டாவது நாளாக நேற்று மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாடுபிடி வீரர்கள் உறுதிமொழி ஏற்றதை தொடர்ந்து கொடியசைத்து துவக்கி வைத்தார். இதில் பங்கேற்ற ஆயிரம் ஜல்லிக்கட்டு காளைகள் மற்றும் 500 மாடுபிடி வீரர்கள் அனைவருக்கும் தங்கக் காசுகள், சைக்கிள், எல்இடி டிவி, மிக்ஸி உள்ளிட்ட விலை உயர்ந்த பரிசு பொருட்களை லாரிகளில் குவியல் குவியலாக வைக்கப்பட்டிருந்த பரிசு குவியலில் இருந்து எடுத்துக் கொடுத்தார். இந்நிகழ்வில் மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ, வருவாய் துறை அதிகாரிகள், தி.மு.க.வினர் பங்கேற்றனர். மேலும் விழாவினை பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் மின்விசிறியுடன் கூடிய பார்வையாளர் மாடத்தில் இருந்தவாறே உற்சாகத்துடன் கண்டு ரசித்தனர்.

### மேயர் பிரியா ராஜன் - கழகத்தினர் பங்கேற்பு! எழும்பூர் தெற்குப் பகுதி துணைச் செயலாளர்

## டி.வி.வேலு - வி.பத்மாவதி இல்லத் திருமண விழா!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையேற்று வாழ்த்தினார்!

சென்னை, பிப்.12

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்குப் பகுதி துணைச் செயலாளர் டி.வி.வேலு வி.பத்மாவதி ஆகியோரின் புதல்வி டாக்டர் வி.சுவாதி இ.ஆர். விக்னேஷ் ஆகியோரது திருமணத்தில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர் பாபு பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார்.

மேலும் இம்மணவிழாவில் மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம்கவி, ஜோசப் சாமுவேல், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கே.எஸ். இரவிச்சந்திரன், தமிழ்நாடு எப்.என்.பி.ஒ. பி4 தொழிற்சங்கச் செயலாளர் சுகுமாறன், சுதீஷ் குமார், கோ. ஏகப்பன், கே.எம்.எஸ். நாதன், இசட். ஆசாத், பகுதிச் செயலாளர்கள் வி .சுதாகர், சோ.வேலு,

ஐ.சி.எப். முரளிதரன் , எஸ். முரளி, வே. வாசு, நா. ராமலிங்கம், கூ.பி. ஜெயின், மற்றும் ஸ்ரீராமுலு, திருமதி. சரிதா மகேஷ்குமார், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, திருமதி. இராஜேஷ்வரிஸ்ரீதர், எல்.சுந்தர்ராஜன் , பரிதி இளம் சுருதி, மாநில நிர்வாகிகள், தமிழன் பிரசன்னா மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டி.லோகேஷ், திருமதி. சுதாதீனதயாளன், பிரதீப்குமார், பி.உதய ஷங்கர், திருமதி. சாவித்திரி வீரராகவன், டி.வி.செம்மொழி, வட்டக் கழகச் செயலாளர்கள் ஆர்.பாபு, வி.விஜயகுமார், டால்பின் அரி, வான் மதிகதிரவன், வி.அபாய், சி.சேகர், ஆர். ரங்கநாதன், நா.பாலு, சு.மனோகர், ஜே.கிருஷ்ண மூர்த்தி , பகுதி நிர்வாகிகள் கே. ரசூல், எஸ். ஜெகதீசன், எம்.தில்லைகுமார், பி.சி. சம்பத்குமார், கோ. வள்ளி மற்றும் மாவட்டக் கழக பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், பகுதிப் பிரதிநிதிகள், செயற்குழு உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள், இளைஞர்கள், கழகத்தினர் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

## உத்திரமேரூர் ஒன்றியத்தில் கட்டிடங்கள் - க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைக்கிறார்!

### க.செல்வம் எம்.பி. பங்கேற்பு! கெ.ஞானசேகரன் - என்.எஸ்.பாரிவள்ளல் அறிக்கை!

காஞ்சிபுரம், பிப். 13 -

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியத்தில் அரசின் சார்பில் க.சுந்தர் எம்.எல்.ஏ. பல்வேறு கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டியும் புதிய கட்டிங்களை திறந்து வைக்கிறார். இதில் க. செல்வம் எம்.பி., ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன், பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

முதலமைச்சரும் பவள விழா காணுகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியில் இன்று (13.02.2025 வியாழக் கிழமை) மதியம் 12:00 மணி அளவில்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியம் மானாம்பதி கிராமத்தில் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவும்

மதியம் 12.30மணி அளவில் உத்திரமேரூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவும்

மதியம் 1.00 மணிக்கு கம் மாளம்பூண்டி அரசு மேல்நிலைப் பள்ளியின் நூற்றாண்டு திருவிழா மற்றும் பள்ளி ஆண்டு விழா நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிகளில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளரும் உத்திர மேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டியும், புதிய கட்டிடங்களையும் திறந்து வைக்கிறார். இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறுவேடல் க. செல்வம் கலந்து கொள்கிறார்.

இந்நிகழ்ச்சிகளில் ஒன்றியத்திற்குட்பட்ட, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றியக் கழக நிர்வாகிகள், பேரூர் கழக செயலாளர் - நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள் - நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கழக உடன்பிறப்புகள் அனைவரையும் கலந்துகொள்ள வேண்டுமாய் ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன், பேரூர் கழக செயலாளர் என்.எஸ். .பாரிவள்ளல் ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## மயிலை மேற்கு பகுதிக் கழக நிர்வாகிகள் செயற்குழுக் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. அறிவிப்பு!

சென்னை, பிப். 13-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் செயற்குழுக் கூட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:

மயிலை மேற்கு பகுதி அவைத் தலைவர் ஜி.ஆர். இராஜேந்திரன் தலைமையில் பகுதி துணை செயலாளர்கள் ஆர்.எல்.வி.அசோக் , பா.பாக்கியதாஸ் அகல்யா விஸ்வநாதன், பொருளாளர் ஜி.முருகையன் ஆகியோர் முன்னிலையில்

வட்ட கழக செயலாளர்கள் டி.ராஜவேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஆர்.ராஜா சுரேஷ்குமார், அ.நாகராஜன், மு.இ. ஏழுமலை, மூ. ராஜேந்திரன் ஆகியோர் வரவேற்பில் மாவட்ட பிரதிநிதி, மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது.

எனவே அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இடம் : மயிலை, சட்ட மன்ற அலுவலகம் அருகில், நாள் : 13/02/2024 வியாழக் கிழமை மாலை 6 மணியளவில்.

பொருள்: முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மற்றும் கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அவர் அறிவித்துள்ளார்.

நன்றியுரை : மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் தினேஷ் மாணிக்கம்

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட

## தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.முக. செயற்குழுக் கூட்டம், வருகிற 15.02.2025 சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் காஞ்சிபுரம் கலைஞர் பவள விழா மாளிகையில் மாவட்ட கழக அவைத்தலைவர் ச. இனியரசு தலைமையிலும் மாவட்ட துணை செயலாளர்கள் டி.வி. கோகுலகண்ணன் க.செல்வம் எம்.பி., கு.மலர்விழி, மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

எனவே, இக்கூட்டத்தில் சட்ட மன்ற உறுப்பினர், தலைமைசெயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய பகுதி, பேரூர் செயலாளர்கள், மாநில, மாவட்ட, கழக அணிகளின் நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழா கொண்டாடுவது சம்மந்தமாக. 2. கழக ஆக்கப்பணிகள்.

**க.சுந்தர், எம்.எல்.ஏ.**

செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

### ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா - க. தனசேகரன் - கே. கண்ணன் முன்னிலை

## 136வது வட்ட பாக உறுப்பினர்கள் ஆய்வு கூட்டம்!

### பூக்கடை ஆர். பழனிச்சாமி தலைமை! வே. உமாகாந்த் ஆய்வு!

சென்னை, பிப். 13 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் ஆலோசனைப்படி, கலைஞர்நகர் தெற்கு பகுதி 136வது வட்ட பாக உறுப்பினர்கள் ஆய்வு கூட்டம் இன்று (13.02.2025) மாலை 5 மணியளவில், கே.கே.நகர், ராணி அண்ணா நகர் 12 ம் பிளாக் எதிரில் உள்ள 136 வது வட்ட கழக அலுவலகத்தில் வட்ட செயலாளர் பூக்கடை ஆர்.பழனிச்சாமி தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் விருகம்பாக்கம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, கணக்குநிலைகுழு தலைவர் க. தனசேகரன், பகுதி செயலாளர் கே.கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்துப் பேசுகின்றனர்.

தொகுதி மேலிடப் பார்வையாளர் வே. உமாகாந்த் ஆய்வு செய்கிறார்.

இக்கூட்டத்தில் வட்டத்திற்குட்பட்ட நிர்வாகிகள், பாக தலைவர்கள், உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் பூக்கடை ஆர். பழனிச்சாமி. கேட்டுக்கொண்டுள்ளார்.

## சென்னை வடக்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை வடக்கு மாவட்ட கழக கூட்டம் 14.02.2025 வெள்ளிக்கிழமை அன்று மாலை 5.00 மணியளவில் இராயபுரம் அறிவகத்தில் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.வெற்றிவீரன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் மரு.கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் இரா.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள்,வட்ட கழக செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள்,அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1) தமிழ்நாடு முதலமைச்சர்கழக தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா. 2) இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்த்தல் மற்றும் 3) கழக ஆக்க பணிகள்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**

பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

### ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா - க. தனசேகரன் - கே. கண்ணன் முன்னிலை

## 137வது வட்ட பாக உறுப்பினர்கள் ஆய்வு கூட்டம்!

### பி. கே. குமார் தலைமை! வே. உமாகாந்த் ஆய்வு!

சென்னை, பிப். 13 -

கலைஞர் நகர் 137-வது வட்டக் கழக ஆய்வுக் கூட்டம் இன்று நடைபெறுகிறது. இது குறித்து வட்டச் செயலாளர் பி.கே.குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு

கலைஞர்நகர் தெற்கு பகுதி 137 வது வட்ட பாக உறுப்பினர்கள் ஆய்வு கூட்டம் இன்று (13.02.2025) மாலை 7 மணியளவில், வட்டகழக அலுவலகம், மூவேந்தர் தெரு, ராஜுவ் காந்தி நகர், சென்னை 78 என்ற முகவரியில் வட்ட செயலாளர் பி. கே. குமார் தலைமையில் நடைபெற உள்ளது.

இதில் ஏ.எம்.வி,. பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. , கணக்குநிலைகுழு தலைவர் க._தனசேகரன், பகுதி செயலாளர் கே_கண்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் தொகுதி பொறுப்பாளர் வே. உமாகாந்த் ஆய்வு செய்கிறார்.

இக்கூட்டத்தில் வட்டத்திற்குட்பட்ட நிர்வாகிகள், பாக தலைவர்கள், உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளமாறு வட்டச் செயலாளர் பி. கே. குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

### அண்ணா அறிவாலயம் தொண்டர் அணி!

## கே.நித்தியானந்தம் பாட்டி ஆண்டாள் அம்மாள் படத்திறப்பு!

சென்னை பிப்.13-

அண்ணா அறிவாலயம் தொண்டரணி கே. நித்யானந்தம் அவர்களின் பாட்டியும் மயிலை கழக முன்னோடி மறைந்த சி.டி. கிருஷ்ணன் அவர்களின் மனைவியும் சி.டி.கே. குமார்,சி.டி.கே. அசோகன்,சி.டி.கே. செல்வம் ஆகியோரின் தாயாருமான கே.ஆண்டாள் அம்மாள் அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (13.2.2025 வியாழக் கிழமை ) மாலை 7 மணி அளவில் எண்.153, சி பிளாக் ஏகாம்பரம் பிள்ளை தெரு மயிலாப்பூரில் நடைபெறுகிறது.

இதில் அனைத்து கழக நிர்வாகிகள் மற்றும் உறவினர்கள் பங்கேற்று அஞ்சலி செலுத்துகின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குளித்தலை கை. அங்கமுத்து

### பிப்ரவரி 13 (2014)



தலைவர் கலைஞர் அவர்கள் முதன்முறையாக சட்டமன்ற உறுப்பினராக குளித்தலை தொகுதியில் போட்டியிட்டபோது, குளித்தலை நகரக் கழகச் செயலாளராக பொறுப்பேற்றிருந்த இவர், தலைவர் அவர்களின் வெற்றிக்காக பாடுபட்டவர்.

கல்லக்குடி போராட்டத்தின்போது குளித்தலையில் கைதாகி, தலைவர் அவர்களுடன் திருச்சி மத்திய சிறையில் இருந்ததோடு, 'நங்கவரம்' போராட்டத்திலும் தலைவர் அவர்களுடன் கலந்து கொண்டவர். அத்துடன் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றவர்.

"மொழிப்போரில் பங்கேற்றது தனது கடமை" என்று சொல்லி, மொழிப்போர் தியாகிகளுக்கு அரசால் வழங்கப்படும் உதவித் தொகையை பெற்றுக் கொள்ளாமல் மறுத்தவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாச்சியார்கோவில் தி. இராமலிங்கம்

### பிப்ரவரி 13 (2009)



பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோரின் பேச்சினாலும் – கொள்கையினாலும் ஈர்க்கப்பட்டு, கழகம் துவக்க காலத்திலே உறுப்பினராகி, கழகப் பணியாற்றி வந்த இவர், தொடர்ந்து 48 ஆண்டுகளாக நாச்சியார்கோவில் கிளைக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

மன்னை நாராயணசாமி, கே.கே.நீலமேகம் மற்றும் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டக் கழக முன்னோடிகளுடன் இணைந்து பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக,நெருக்கடிகாலத்தில் மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**